பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.
ஆசிரியர் : இரா. செழியன் எம். ஏ. எம்.லிட்.

மலர் : 16] சென்னை : கார்த்திகை 26 (11—12—68) புதன் ★ வெளியூர் : கார்த்திகை 27 (12—12—68) வியாழன் [இதழ் : 147

அண்ணா— இராஜாஜி சந்திப்பு

சென்னை, டிச. 11—

சுதந்திராக் கட்சித் தலைவர் இராஜாஜி அவர்கள் இன்று காலை 9-30 மணியளவில் நுங்கம்பாக்கம் அறிஞர் அண்ணா இல்லம் வந்து அண்ணாவைச் சந்தித்து சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டுச் சென்றார்.

அக்கிரமம் எங்கு நடைபெற்றாலும் எதிர்த்துக் கேட்க உரிமை உண்டு

மக்கள் உரிமைச் சாசனத்துக்குப் பக்கபலமாகத் திரண்டு நிற்பீர்!

நாட்டினருக்கு அறிஞர் அண்ணா வேண்டுகோள்

"எத்தனை எத்தனையோ காரணங்களைக் காட்டி மனிதனை மனிதன் தாழ்வாக நடத்துவதும், அழுத்திவைப்பதும், அலைக்கழிப்பதும், பலப் பல நூற்றாண்டுகளாக நடைபெற்றுக் கொண்டிருந்தது; 'இது அக்கிரமம்' என்று துணிந்து கூறக்கூட, பலர் முன்வர அஞ்சினர்! அக்கிரமம் நடைபெற்ற இடத்திலேயே இங்கிலை என்றால், பிற நாடுகளில் உள்ளவர்கள் எப்படிக் கேட்பர்? எவர் எதிர்ப்பர்?

"'இது என் அரசு; இங்கு எது எப்படி நடைபெற வேண்டுமென்பதைத் தீர்மானிக்கும் முழு அதிகாரம் எனக்கே உண்டு' என்று ஆதிக்கக்காரன் கூறிடும்போது, 'நாடு உன் ஆட்சியில் இருக்கலாம்; ஆனால், அக்கிரமம் நடைபெறும்போது, 'ஏன்?' என்று கேட்க உலகுக்கு அதிகாரம் இருக்கிறது; மனிதனை மனிதன் கொடுமைப் படுத்தும்போது, மனிதகுலத்தின் பேரால் -- மக்கள் உரிமையின் பேரால் -- ஏன் என்று எதிர்த்துக் கேட்டிட உலகுக்கு அதிகாரம் உண்டு' என்று, எடுத்துக்கூற எவருக்கும் எண்ணம்கூட எழவில்லை!

"எங்கு அக்கிரமம் நடைபெற்றாலும் எதிர்த்துக் கேட்டிட உலகுக்கு உரிமை உண்டு" என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட நாளே 1948 டிசம்பர் 10! இதனை 58 நாடுகள் ஒப்புக்கொண்டது, மனிதகுல வரலாற்றில் மதிப்புமிக்க நாளாகும்.

"முப்பது பிரிவுகளைக்கொண்ட இந்த மனித உரிமைச் சாசனம், 'மொழி -- நிறம் -- மதம் -- வகுப்பு -- சிறுபான்மை -- ஏழ்மை முதலிய எந்தக் காரணத்தாலும் மனிதனுடைய உரிமைகள் பறிக்கப்படவோ, குறைக்கப்படவோ கூடாது' என்பதனைத் திட்டவட்டமாகத் தெரிவிக்கிறது.

"எந்தக் காரணம் காட்டி எந்த இடத்தில் மனித உரிமை பறிக்கப்பட்டாலும் அந்த அநீதியை எதிர்த்திட, 'மனித குலத்தின் பிரதிநிதி' என்ற முறையில் மற்ற நாடுகள் -- அல்லது, எல்லா நாடுகளையும் உறுப்பினராகக் கொண்ட ஐக்கிய நாடுகள் பேரவை -- உரிமை பெறுகிறது!

"இந்த உரிமையை வழங்குவதற்கு 58 நாடுகள் ஒப்புக்கொண்டது, உள்ளபடி மகிழ்ச்சியுடன் வரவேற்கப்பட வேண்டியதாகும்; உலகு முழுவதற்குமாக -- மனித குலம் முழுவதற்குமாகச் சேர்த்துப் பெறப்பட்டுள்ள சாசனமாகும்.

"இந்தச் சாசனம் ஏற்படுவதற்கு நெடுங்காலத்துக்கு முன்பிருந்தே, 'மனிதனை மனிதன் தாழ்த்துவது கொடுமை' என்ற உணர்வு சில பலரிடம் எழத்தான் செய்தது; ஆனால் அது, 'பரிவு -- பச்சாதாபம்' என்ற உணர்வுடன் பிணைந்ததாக மட்டும் இருந்தது; உரிமை குரலொலியாக வடிவம் கொள்ளவில்லை! 'அவனும் மனிதன் தானே' என்ற பேச்சு, இந்த வகையைச் சார்ந்தது! நானென்ன மிருகமா?' என்று கொடுமைக்கு ஆளானவன் குமுறியதும் இதேவிதமானதுதான்!"

இவ்வாறு முதலமைச்சர் அண்ணா அவர்கள், 'மனித உரிமை நாள்' பற்றி வானொலி மூலம் ஆற்றிய உரையில் தெள்ளத் தெளிவுறச் சுட்டிக்காட்டி விளக்கினார். 'மக்கள் உரிமைச் சாசன'த்திற்குப் பக்கபலமாக மக்கள் குலம் திரண்டு நின்றிட வேண்டும்' என வேண்டுகோள் விடுத்து அவர் ஆற்றிய உரை வருமாறு :—

உலகெங்கும் மக்கள் உரிமை நாளாக டிச. 10-ம் நாள் நடத்தப்பட்டு, மக்கள் உரிமை பற்றிய உரைகள் நிகழ்த்தப் பட்டுவருகின்றன—கடந்த 20 ஆண்டுகளாக!

1948-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 10-ம் நாள் ஐக்கிய நாடுகள் பேரவை பாரிஸ் நகரில் கூடி மக்கள் உரிமை பற்றிய 'சாசன'த்தை வெளியிட்டது.

1762-ம் ஆண்டிலேயே தீவிரக் கருத்துக்களின் பெட்டகமாகவும், புரட்சியூட்டும் சிந்தனையாளராகவும் விளங்கிய ரூசோ—ஜீன் ஜாகஸ் ரூசோ, 'மனிதன் சுதந்தரமாகவே பிறக்கிறான்; ஆனால், எங்கும் அவன் அடிமைப்பட்டே உழலுகிறான்' என்று எழுச்சியுடன கூறியது, அதே பாரிசு நகரிலேதான்! எனவே, மனித உரிமைக்கான சாசனத்தை வெளியிடப் பல்வேறு நாட்டுப் பேரறிவாளர் கூடியது பொருத்தமான இடந்தான.

58 நாட்டவர்கூடினர்; சில நாடுகள் வாக்கெடுப்பிலே கலந்து கொள்ளவில்லை. வாக்கெடுப்பில் கலந்துகொண்ட நாடுகள் அனைத்தும், சாசனத்துக்கு ஒப்புதல் அளித்தன. எதிர்ப்பு ஏதுமின்றி அந்தச் சாசனம் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மனித குல வரலாற்றில், ரூசோ போன்ற சிந்தனையாளர் பலர் உரிமைகளுக்காக வாதாடி வந்தனர்!

பலர், உரிமைப்போர் நடத்தித் தம்மைத் தாமே பலியிட்டுக் கொண்டனர்!

பல இடங்களில் உரிமைப்போர் நடத்தப்பட்டபோது, பயங்கர விளைவுகள் வெடித்தன!

ஆனால், 58 நாடுகள் ஒருமனதாக மக்களின் உரிமைக்கு மதிப்பளித்து, அதற்கான ஒரு சாசனத்தை வெளியிடக் கூடிய வரலாற்று நிகழ்ச்சி முதல் முறையாக நடைபெற்றது 1948-ல்!

'எனக்குத் தெரியும் -- உனக்கு என்ன தெரியும்? நீ யார் எனக்குக் கூற -- நீ கூறி நான் கேட்க வேண்டுமா? என் விருப்பம்போல் நான் நடப்பேன் -- தடுத்திட நீ யார்?' என்ற தடிப்பான கேள்விகள், தனி மனிதர்களுக்கு மத்தியிலேயே மிக அதிகமாக எழுவதைக் காண்கிறோம்!

அந்த மனப் போக்குக்கும், 58 நாடுகள் கூடி, 'மனித உரிமைகள் மதிக்கப்படத்தான் வேண்டும்; அதற்கு ஏற்றபடி எல்லா நாடுகளும் நடந்து கொண்டாக வேண்டும்; இது நமக்கு நாமே பிறப்பித்துக் கொள்ளும் ஆணை' என்ற முறையில் முடிவெடுத்த மனப்பாங்கை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, எத்தனையோ இன்னல்களைத் தாங்கிக்கொண்ட மனித குலம் இன்ப ஒலியை -- அறிவுக் கதிரை நாடிச் செல்லத் தொடங்கிவிட்டது என்பது விளக்கமாகிறது!

மனிதகுல வரலாற்றில், இது மிக முக்கியமான ஒரு கட்டமாகும்.

ஒருநாடு பெண்களை அடிமைப் படுத்தும்; ஒரு நாட்டிலே அடிமைகளைச் சந்தைப் பொருளாக்குவர்; ஒருநாட்டில் மத பேதம் காரணமாக, மக்களை மாக்களைவிட கேவலமாக எண்ணிக் கொடுமை செய்வர்!

மொழி ஆதிக்கக்காரர்கள் தமது ஆளுகையிலே இருந்திடும் பிற மொழியாளர்களை இரண்டாந்தரக் குடிமக்களாக்கிட எக்காளமிடுவர்!

'இவன் மனிதன்; இவனுக்கென சில மறுக்க முடியாத உரிமைகள் உள்ளன; இந்த உரிமைகளை எவரும் பறிக்கவோ, குறைக்கவோ கூடாது' என்ற புதியதோர் முழக்கம் எழுப்பப்பட்ட நாள்--1948 டிசம்பர் 10.

இந்தச் சீரிய பணியில் தம்மை முழுக்க ஈடுபடுத்திக்கொண்டு அயராது பாடுபட்ட திருமதி ரூஸ்வெல்ட் அம்மையாரை இந்நாளில் நினைவிற்கொண்டு அஞ்சலி செலுத்துவது, மக்கள் உரிமைப் பிரச்சினையில் அக்கறைகொண்ட அனைவரது கடமையுமாகும்.

'சாசனம் தயாராகி விட்டது; நாடுகள் ஒப்புக்கொண்டுள்ளன; எனப் பெருமிதத்துடன் இருந்திடலாம்; ஆனால், 'அந்தச் சாசனத்தின்படியே எல்லா நாடுகளும் நடந்துகொள்கின்றன' என்று கூறிவிட முடிகிறதா? அந்த மனநிறைவு கொள்ள முடிகிறதா?

'அக்கிரமம் தொலைந்தது; மனித உரிமைகள் நிலைத்து நிற்கின்றன -- தழைத்து இருக்கின்றன' என்று கூறிக்கொள்ள முடிகிறதா என்றால், வருத்தத்துடன் தெரிவிக்கத்தான்

(4-ம் பக்கம் பார்க்க)

காங்கிரசுப் பிரமுகருக்கு 5 ஆண்டுகள் சிறை

மற்றும் 8 பேருக்கு 3 ஆண்டு-- இருவருக்கு 2 ஆண்டு

புதுவை கழகத் தோழரை வெட்டிய வழக்கில் தீர்ப்பு

புதுவை, டிச. 10—

கழகத் தோழரின் கையை வெட்டிய காங்கிரசுக்காரர்கட்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சோரியங்குப்பத்தைச் சேர்ந்த கழகத் தோழர் வி. கிருட்டின மூர்த்தியை காங்கிரசுக்காரர்கள் அரிவாள் கொண்டு தாக்கியதும், இதனால் அவரது வலது கை துண்டிக்கப்பட்டதும் தெரிந்ததே.

இது தொடர்பாக நடைபெற்று வந்த வழக்கு விசாரணை முடிந்து நேற்று தீர்ப்பளிக்கப்பட்டது.

காங்கிரசுப் பிரமுகரும், நகராட்சி உறுப்பினருமான கோபால் என்பவருக்கு ஐந்தாண்டுச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

மற்றும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த இராமையன், இராமகிருட்டினன், சீதாராமன், பாலகிருட்டினன், தண்டபாணி சுப்பராயன், கோதண்டபாணி, பாலகிருட்டினன், ஆகியோருக்கு மூன்றாண்டுச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

கோனேரி, உருட்டி கோவிந்தசாமி ஆகியோருக்கு தலா இரண்டாண்டுச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

நாடு முழுவதும் சீரான வளம்பெற ஆறுகள் அனைத்தையும் இணைத்திட வழிகூறுவீர்!

நிலஇயல் நிபுணர்களுக்கு முதலமைச்சர் அண்ணா கோரிக்கை

சென்னை, டிச. 11—

"நாடு முழுவதிலும் சீரான வளர்ச்சி ஏற்பட இந்தியாவில் உள்ள ஆறுகள் அனைத்தும் இணைக்கப்பட வேண்டும்; இதில் நிலஇயல் நிபுணர்கள் உரிய கவனம் செலுத்த வேண்டும்"

என்று, நில இயல் அறிஞர்களை கவர்னர் சர்தார் உஜ்ஜல் சிங்கும், முதலமைச்சர் அண்ணா அவர்களும் கேட்டுக்கொண்டனர்.

"வடநாட்டிலுள்ள வற்றாத நதிகளின் நீர் வீணாகப் போகின்றன; தென்னாட்டிலுள்ள ஆறுகளுடன் அந்நதிகளை இணைத்தால் இறுதியில் நம் நாட்டின் பொருளாதாரம் மேம்படும்; இதுபற்றி நிலஇயல் நிபுணர்கள் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

"தமிழ்க் கவிஞர்கள் பலர் இந்த எண்ணத்தைத் தங்களுடைய கவிதைகளில் முன்பே வெளியிட்டிருந்தாலும், அது, திட்டமிடுபவர்களின் எண்ணத்தைக் கவர்ந்ததாகக் காணோம்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், நிலஇயல் பற்றிய கருத்தரங்கைத் துவக்கிவைத்துப் பேசுகையில் தெளிவுபட எடுத்துரைத்தார்.

அனைத்து நாட்டு நில இயல் மாநாட்டின் ஆதரவில் இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங்கும், முதலமைச்சர் அண்ணா அவர்களும் கலந்து கொண்டு பேசினர்.

ஆளுநர் உஜ்ஜல் சிங்

ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் பேசுகையில் கூறியதாவது:—

"இந்தியா பெரிதும் ஒரு விவசாய நாடாகும். பெரும்பாலோர் வாழ்க்கைக்கு விவசாயத்தையே நம்பியுள்ளனர்.

நாட்டின் சில பகுதிகளில் ஆண்டுதோறும் குறிப்பிட்ட காலத்தில் வெள்ளம் ஏற்படுகிறது; மற்றும் சில பகுதிகள் வறட்சியால் பாதிக்கப்படுகின்றன.

நாட்டில் உள்ள எல்லா நதிகளையும் ஒன்றாக இணைக்க வேண்டும் என்று சில நிபுணர்கள் யோசனை தெரிவித்துள்ளனர்.

தமிழகத்தில் விவசாய உற்பத்தியில் அதிகக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது; ஒரே சீராக மழை பெய்யவில்லை; ஆகவே நிலவியல் நிபுணர்கள் இப்பிரச்சினையைக் கவனித்து சங்கடங்களைச் சமாளிக்க உதவுவர் என நம்புகிறேன்.

பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் நில இயல் படிப்புக்கு முக்கியத்துவம் தரப்படுவது அவசியமாகும்."

முதலமைச்சர் அண்ணா

முதலமைச்சர் அண்ணா அவர்கள் பேசுகையில் கூறியதாவது:—

"நில இயல் பாடத்தை உரிய முறையில் கற்பித்தால் அது சுவையுள்ளதாக இருக்கும்.

நில இயல் என்றால் என்ன--உலகின் இதர பகுதிகளில் மக்கள் எப்படி வாழ்கிறார்கள்--அவர்களின் பழக்க வழக்கங்கள் என்ன --- என்பவைகளையெல்லாம் மக்கள் அறிய வேண்டியது அவசியமாகும்.

தமிழகத்திலும் விவசாயம் அதிகம்; ஆனால், தென்னிந்தியாவில் தண்ணீர்ப் பற்றாக்குறை உள்ளது.

நாட்டின் வட பகுதியில் தேவையில்லாத தண்ணீர், பற்றாக்குறையாக உள்ள தென் பகுதிக்கு அனுப்பப்பட வேண்டுமென நாங்கள் விரும்புகிறோம்.

வட இந்தியாவில் தண்ணீர் வழிந்தோடி சில பகுதிகள் நீரில் மூழ்குவது ஒரு பிரச்சினை; ஆனால் தென்னிந்தியாவில் வறட்சி ஒரு பிரச்சினை.

பிரும்மபுத்திரா முதல் வைகை வரை -- நதிகள் எல்லாம் ஒன்றாக இணைக்கப்பட்டு -- அவ்வாறு இணைக்கப்படுவதால் ஏராளமாக வேண்டிய அளவுக்குத் தண்ணீர் கிடைத்து நாடு முழுவதும் செழிப்பான பகுதியாக மாறும் காலம் விரைவில் வரும் என நம்புகிறேன்."

'இது தமிழ்நாடு' என்ற நூலை அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் வெளியிட்டார்.

திரு. டி. எம். பால், பேராசிரியர் பி. பிராய்லட் ஆகியோரும் பேசினர்.

செயின்ட் கிறிஸ்டோபர் கல்லூரி முதல்வர் செல்வி ஜி. சாமுவேல் நன்றி கூறினர்.

ஆறுதல் நடவடிக்கை எடுக்கத் தயங்கேன்!

சென்னை, டிச. 11—

என்னுடைய சினிமா உலக நண்பர்கள், 'இந்தப் பரிசுச் சீட்டுத் திட்டத்தினால் சினிமா வருமானம் குறைந்துவிட்டது' என்று சொல்லுகிறார்கள்; ஆனால், பத்திரிகைகளைப் புரட்டினால், 'பத்தாவது வாரம் -- பதினோராவது வாரம்' என்று விளம்பரங்கள் வந்தவண்ணம் இருக்கின்றன.

ஒன்று, உண்மையாக இருந்தால் இன்னொன்று முழு உண்மையாக இருக்கமுடியாது; அது உண்மையாக இருந்தால் மற்றொன்று முழு உண்மையாக இருக்கமுடியாது.

சினிமா வருவாய் குறைகிறது என்றால், அது அரசுக்கும் நட்டம்தான்!

உண்மையில் சினிமா வருவாய் குறைந்திருந்தால், அதைப் புள்ளிவிவரத்தோடு எடுத்துரைத்தால் அவர்களுக்கு ஆறுதல் நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள நான் தயங்கமாட்டேன். ஆனால், நான் ஆராய்ந்து பார்த்ததில், சினிமா வருவாய் குறையவில்லை என்றே தெரிகிறது.

சில பத்திரிகைகள், பரிசுச் சீட்டுகளை வாங்கியதன் மூலம் சிலர் ஓட்டாண்டிகளாகிவிட்டதாக எழுதி வருகின்றன; மக்களில் சிலர் இலட்சாதிபதிகளாகி வரும்போது, இவர்கள் இப்படி எழுதுவது, நல்ல சங்கீதக் கச்சேரி நடக்கும்போது நாலு பேர் இருமி -- அதனால் கச்சேரி களை கட்டாமல் போகட்டும் என்று எதிர்பார்ப்பது போலாகும்!

மக்கள் அவரவர்களது நிலைமையை மிஞ்சி பரிசுச் சீட்டு வாங்க வேண்டுமென்று யாரும் எதிர்பார்க்கவில்லை -- விரும்பவுமில்லை -- கேட்டுக் கொள்ளவுமில்லை -- அப்படி வாங்கினால் அது தவறு.

'போனால் வராது -- பொழுது போனால் நிற்காது' என்ற அறிப்பு வேண்டியதில்லை; அதற்காகத்தான் மாதத்துக்கு ஒரு தடவை குலுக்கல் வைத்துள்ளோம்."

---முதலமைச்சர் அண்ணா

(பரிசுச் சீட்டு பரிசளிப்பு விழாவில்)

தமிழ் இலக்கியத்தைக் கற்பீர்!

நில நூலறிஞர்கட்கு அண்ணா யோசனை

சென்னை, டிச. 11—

"தமிழ் இலக்கியங்களை ஆராய்ந்தால், அவற்றின் மூலம் நில நூலறிஞர்களுக்குப் பல தகவல்கள் கிடைக்கும்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், சென்னை இராஜாஜி மண்டபத்தில் நடந்த நில நூல் பற்றிய கருத்தரங்கில் பேசுகையில் கூறினர்.

பண்டைத் தமிழ் இலக்கியங்களைச் சிறிது காலம் ஆராயுமாறு அண்ணா அவர்கள், வெளிநாட்டிலிருந்து வந்திருந்த நில நூலறிஞர்களைக் கேட்டுக்கொண்டார்.

அறிஞர் அண்ணா அவர்கள் மேலும் குறிப்பிட்டதாவது:—

"தமிழ் இலக்கியங்களில் அயல் நாடுகள் பற்றியும் விளக்கப்பட்டிருக்கிறது; நிலப் படம் மூலம் அல்ல -- வெறும் சொற்களாலேயே விளக்கப்பட்டிருக்கிறது. அவற்றைப் படித்துப் பார்த்தால் நில நூலறிஞர்கட்குத் தேவையான பல தகவல்கள் கிடைக்கும்.

"பண்டைத் தமிழ் இலக்கியங்கள் நிலத்தை ஐந்து வகைகளாக -- குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல், பாலை என --- பிரித்துக் கூறுகின்றன."

ஆதித்திராவிடர்கட்கு புதிய சலுகை

வியாபாரம் நடத்த ரூ. 5000 வரை கடன்

சென்னை, டிச. 11—

தாழ்த்தப்பட்டவர்கள் வியாபாரம் நடத்தி, தங்களது பொருளாதார நிலைமையை உயர்த்திக் கொள்ளும்பொருட்டு ரூ. 1-ஆயிரத்திலிருந்து ரூ. 5-ஆயிரம்வரை வட்டியில்லாக் கடன் வழங்கும் திட்டமொன்றைச் செயல்படுத்த தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது.

தகுதியுள்ள இந்து ஆதித்திராவிடர்களுக்கு 1969 மார்ச்சுக்குள் கடன்களை வழங்குவதற்காக இத்திட்டத்தின்கீழ் ரூ. 1 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இத்திட்ட விதிகளின்படி 3 ஆண்டு வியாபார அனுபவம் உள்ளவர்கள் மட்டுமே இக்கடனுதவியைப் பெறத் தகுதி உடையவர்கள். அவர்களுக்கு வியாபாரம் நடத்தச் சொந்த இடம் இருக்க வேண்டும்.

விண்ணப்பங்களை மாவட்ட நல அதிகாரிகள் பரிசீலிப்பர். கடன் தொகை அளவு பின்னர் முடிவு செய்யப்படும்.

100 மாதத் தவணைகளில் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும். கடன் வழங்கப்பட்ட நாளிலிருந்து 12 மாதங்களுக்குப் பின்னரே முதல் தவணை துவங்கும்.

சென்னை நகரைப் பொறுத்தவரை, இதுவரை 40 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன; அவை பரிசீலனையில் உள்ளன.

அரிசிக் கடத்தலைத் தடுக்க கடும் நடவடிக்கை

செங்கற்பட்டு மாவட்டக் கலெக்டர் அறிவிப்பு

காஞ்சிபுரம், டிச. 11—

காஞ்சிபுரத்திலிருந்து சென்னைக்கு இரயில், லாரி, கார்மூலம் அரிசி கடத்தப்படுவதைத் தடுக்கச் சோதனை நடவடிக்கைகளைத் தாம் கடுமையாக்கியுள்ளதாக கலெக்டர் திரு. இலட்சுமிகாந்தன் பாரதி தெரிவித்தார்.

கடத்தலுக்கு முற்றுப்புள்ளி வைக்கும்படி போலீசு அதிகாரிகளுக்கும் தாம் தெரிவித்துள்ளதாக அவர் சொன்னார்.

அரிசி கடத்தலில் ஈடுபடும் லாரிகள் பறிமுதல் செய்யப்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

அநியாயமாக வரி விதிக்க மாட்டோம்

நியாயமான வரியைக் குறைக்க மாட்டோம்

சென்னை, டிச. 11—

"விற்பனை வரியைக் குறைக்க வேண்டும் என்று இங்கு கோரிக்கை தெரிவித்தீர்கள்; விற்பனை வரி என்பது காமதேனு போன்றது; அதைக் குறைப்பது முடியாத காரியம்; எந்த மாநிலமும் குறைக்க முன்வராது.

"வியாபாரிகள் இரண்டு வகையான கணக்குகள் வைக்கிறார்கள். வியாபாரிகளை நான் குறை கூறவில்லை; வரி விதிப்பிலிருந்து தப்புவதற்காக இந்த முறையை அவர்கள் கையாளுகிறார்கள்; ஆனால் அதையும் சேர்த்துக் கணக்கிட்டுத்தான் வரி விதிக்கப்படுகிறது!

"வரி விதிப்பிலிருந்து எப்படித் தப்பலாம் என்று வியாபாரிகள் சட்டத்தைப் புரட்டுகிறார்கள்!

"அரசாங்கம் அநியாயமாக வரி விதிக்காது. திட்டமிட்ட வரி வரவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம்.

"சனநாயக நாட்டில், வரியால்தான் ஆட்சி நடத்த முடியும்; வரி கொடுக்கும்போது மனம் நோகாமல் கொடுக்க வேண்டும்."

--அமைச்சர் செ. மாதவன்

(பிண்டோ ரோட்டரி எண்ணெய் ஆலை உரிமையாளர் சங்க விழாவில்)

நெல்லூர் அரிசி சென்னைக்கு இல்லையாம்!

சென்னை, டிச. 10—

அடுத்த சில ஆண்டுகளில், சென்னைக்கு நெல்லூர் அரிசி வழங்கப்படுவது நிறுத்தப்பட்டுவிடுமாம்; ஏனெனில், இந்த இரக நெல் சாகுபடியை ஆந்திர விவசாயிகள் கைவிட்டுவிடுவராம்.

இது, ஏழு மாத காலப் பயிராம்; ஆண்டிற்கு ஒரு முறைதான் சாகுபடி செய்ய முடியுமாம்; எனவே விவசாயிகள், இரு போகம் விளையக்கூடிய இரகத்தைச் சாகுபடி செய்வராம்.

இப்படியெல்லாம் தெரிவித்த ஆந்திர வேளாண்மைத் துறை அமைச்சர் திம்மா ரெட்டி, 'சென்னையில் இருப்பவர்களுக்கு நெல்லூர் அரிசி வேண்டுமானால், அதற்கு அவர்கள் நியாய விலை தர வேண்டும்' எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

சுதந்தரம் பெற்று 20 ஆண்டுக்குப் பின்னும்...

வடநாட்டில் தீண்டாமைக் கொடுமை!

ஜெய்ப்பூர், டிச. 10—

சுதந்தரம் பெற்று 20 ஆண்டுகளுக்குப் பிறகும்--தீண்டாமைத் தடுப்புச் சட்டம் நடைமுறையில் இருந்தும்--நாட்டில் தீண்டாமை இன்னும் தாண்டவமாடிக் கொண்டிருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக செய்தி ஒன்று கிடைத்திருக்கிறது.

இராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள ஊர்ப் பொதுக் கிணறுகளில் தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்கள் தண்ணீர் எடுக்க அனுமதிக்கப்படுவதில்லையாம்!

இதனை, மாநில தாழ்த்தப்பட்டோர் சங்கம் வேதனையோடு ஓர் அறிக்கை மூலம் தெரிவித்துள்ளது.

இந்தி வெறியர்களின் பண்பற்ற செயல்

இந்தி தெரியாதவரை இந்தியில் பேசச் சொல்லிக் கூச்சல்

பம்பாய கவர்னர் செரியனுக்கு ஏற்பட்ட அவமதிப்பு

பம்பாய், டிச. 9—

'கடற்படை வாரத்தை' முன்னிட்டு கடற்படையினரின் நலனுக்கு நிதி திரட்டுவதற்காக பம்பாய் பிராப்ளச்ஸ் மைதானத்தில் ஒரு கலை நிகழ்ச்சி நடந்தது.

கடற்படைத் தளபதி எஸ் எம் நந்தா, இந்தி மொழியில் பேசி முடித்தவுடன், கவர்னர் டாக்டர் பி. வி. செரியன் ஆங்கிலத்தில் பேச ஆரம்பித்தார்; இந்தி மொழியிலோ அல்லது மராத்தி மொழியிலோ தம்மால் பேச இயலாதது பற்றித் தாம் வருந்துவதாகவும் திரு. செரியன் குறிப்பிட்டார்.

இருந்தபோதிலும், விழாவுக்கு வந்திருந்த இந்தி வெறியர்கள் பலர் எழுந்து அவருக்கு எதிராகக் கூச்சல் போட்டனர்!

"நான் ஆங்கிலத்தில் பேசுவதைக் கேட்க நீங்கள் விரும்பாவிட்டால் நான் பேசாமல் உட்கார வேண்டியதுதான்" என்றார் அவர்; அதன் பிறகும் கூச்சல் ஓயவில்லை; ஆகவே அவர் பேச்சை அத்துடன் நிறுத்தி விட்டார்.

200 ஆண்டுக் காலத் தடை நீங்குகிறது

இலண்டன், டிச. 9—

பிரிட்டிஷ் நாடாளுமன்றச் செய்திகளை வெளியிடுவதற்கு 18-ஆம் நூற்றுண்டில் விதிக்கப்பட்ட தடை விரைவில் நீங்கும்.

கடந்த 200 ஆண்டுக்காலமாகப் பத்திரிகையாளர்களும், அரசியல்வாதிகளும் நாடாளுமன்ற நிகழ்ச்சிகளை அறிய முடியாமல் தடுக்கப்பட்டு வந்திருக்கின்றனர்.

புதுவையில் காங்கிரசார் காலித்தனம்

காந்தி—நேரு பெயர்களைக் கூறிக்கொண்டே 'அராஜகம்'!

கண்ட இடங்களிலெல்லாம் கழகத் தோழர்கள் தாக்கப்படும் அக்கிரமம்

புதுவையில் காங்கிரசுக்காரர்களின் காலித்தனம் தொடர்கிறது.

வீராம்பட்டினம் சழகக கூட்டணி வேட்பாளர் ப. தணிகாசலத்திற்கு ஓட்டுக் கேட்கச் சென்ற பொதுமக்களையும், கழகத் தோழர்களையும் காங்கிரசு வேட்பாளர் கோபால் என்பவர் பல ரவுடிகளை வைத்துக்கொண்டு, ப இராமச்சந்திரன், திருஞானம் மற்றும் பலரை, மண்டை உடைந்து—கால், கைகளில் எலும்பு முறிவு ஏற்படுகின்ற அளவுக்குத் தாக்கிக் கடத்திச் சென்றுவிட்டனர்.

இதுபற்றிக் காவல்துறையினருக்குத் தெரிவித்தும், 'கவனிக்கிறோம்' என்ற பதில்தான் கிடைக்கிறதே தவிர, கவனிப்பாரற்ற நிலையில் கழகத் தோழர்கள் இருக்கிறார்கள்.

கோர்க்காடு கழகச் செயலாளர் பார்த்தசாரதிமீது காங்கிரசுக்காரர்கள் அபாண்டமாகப் பொய்ப் புகார் கொடுத்ததன் பேரில் காவல்நிலைய அதிகாரி பார்த்தசாரதியை பூட்ஸ்காலால் உதைத்திருக்கிறார்.

மணமேடு எம் ஜி. ஆர். மன்றத் தோழரை, காங்கிரசுக்காரர் புகார்மீது போலீசார் பூட்ஸ் காலால் உதைத்தும், அடித்தும் காயங்களுடன் காவலில் வைத்திருக்கின்றனர்.

திருகாஞ்சியில், காங்கிரசுக்காரர்கள், கழகக் கூட்டணிக்கு ஆதரவாக உள்ள அரிசன காலனியில் சென்று—நரிமேடு கோவிந்தராசு, மாணிக்கசாமி போன்ற பல ரவுடிகளுக்கு கதர்ச் சட்டை—குல்லாய் போட்டு, 'மகாத்மா காந்தி வாழ்க; கூட்டணி ஒழிக' என்று கூவியவாறு முனியம்மாள், தாயம்மாள், சபாபதி, அம்மாவாசை, நமுவை, இன்னும் பல ஆதரவாளர்களைத் தாக்கிப் படுகாயப்படுத்தியிருக்கின்றனர்.

இதுபற்றிக் காவல் நிலையத்தில் புகார் செய்ததன்மீது, 'சமரசம்' செய்துவைக்கப்பட்டது.

காங்கிரசுக்காரர்களுக்குத் தண்டனை தரப்படக்கூடியதான நிலைமை இருந்தால் 'சமரசம்'—இல்லையென்றால், கழக ஆதரவாளர்களுக்குக் காவல்! இதுதான் நிலைமை!

கூட்டணியின் வெற்றி உறுதி என்பதை அறிந்துகொண்ட காங்கிரசுக்காரர்கள், வன்முறைச் செயலைக் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றனர்!

காவல் துறையின் பாராமுகமும் போக்கும், காங்கிரசுக்காரர்களின் வெறிச் செயல்களும் நீடிக்கின்றன!

பாகூரில் தி. மு. க. அவைத் தலைவர் என். இராமச்சந்திரன் தேர்தல் அலுவலகத்தில் வேலைகளை கவனித்துக் கொண்டிருக்கையில், துணை மேயர் இராமச்சந்திரன் காளை மாட்டுச் சின்னத்தை மார்பில் குத்திக்கொண்டு, 'காமராசர் வாழ்க; நேருஜீ கு ஜே' என்று கூறி தோழர் இராமச்சந்திரனைப் பார்த்து, 'வெளியில் வாடா—வராவிட்டால் நாங்களே உள்ளே நுழைந்து கொலை செய்வோம்; சோரியாம் குப்பத்தில் நடத்தியதைவிட அதிகமாக நடத்துவோம்' என்று கூறியதுடன், பயங்கர ஆயுதங்களைக் கொண்டு உள்ளே நுழையவே, தோழர் இராமச்சந்திரன் சாதுரியமாகத் தப்பித்துக்கொண்டார்.

ஆலங்குப்பம் தொகுதி வேட்பாளர் மு. பெருமாள் ஓட்டுக் கேட்கச் சென்றபோது, காங்கிரசுக் காலி இராமச்சந்திரன், பொன்னுசாமி ஆகியோர் கொடி கட்டச் சென்றவரை பலமாகத் தாககியதால் அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார். காவல்துறையினர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

திருவாவடுதுறை டி. என். இராசரத்தினம் நினைவு நாள்

அமைச்சர் மு. கருணாநிதி கலந்துகொள்கிறார்

மறைந்த நாதசுர மேதை திருவாவடுதுறை இராசரத்தினம் அவர்களின் நினைவு நாள் 12-12-68 அன்று கரூரில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும்.

இந்த விழாவில் பொதுப்பணியமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்களும் கலந்துகொள்கிறார்.

விழாவுக்கு வழக்கறிஞர் கே. வி. கஸ்தூரி தலைமை வகிப்பார்; திரு. அன்பில் தர்மலிங்கம் துவக்கி வைப்பார்.

கரூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சி. முத்துசாமி, டி. என். இராசரத்தினம் உருவப் படத்தைத் திறந்து வைப்பார்.

மற்றும் பரமத்தி சண்முகம், என். ஆர். இராமசாமி ஆகியோரும் சொற்பொழிவாற்றுவர்.

தமிழ்நாட்டின் புகழ்பெற்ற நாதசுரக் கலைஞர்களும் திரைப்பட இசைக் கலைஞர்களும் கலந்துகொள்வர்.

மதுரை 29 வது வட்டாரக் கழகத் தோழர்களுக்கு:

வரவிருக்கும் நகராட்சித் தேர்தலுக்கான 29-வது வட்டார வாக்காளர் பட்டியல், தெற்கு மாசிவீதி காமாட்சி அம்மன் கோவில் 2-ஆம் சந்திலுள்ள (மறவர்சாவடி அருகில்) அண்ணா ஏஜன்சியில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது; தோழர்கள் தொடர்புகொண்டு, விடுபட்டுப்போன வாக்காளர்களைச் சேர்க்குமாறும் ஏனைய திருத்தங்கள் இருப்பின் செய்யுமாறும் வட்டாரச் செயலாளர் எஸ். நாச்சியப்பன் வேண்டுகிறார்.

கோதுமை உட்கொண்டால் உயரம் அதிகரிக்கும்?

சென்னை, டிச. 11—

"கோதுமையைப் பற்றி தமிழ்நாட்டில் தவறான எண்ணம் நிலவுகிறது; மற்ற அண்டை மாநிலங்களைவிடத் தமிழ்நாட்டில், கோதுமைமீது அதிக அளவில் வெறுப்பு மனப்பான்மை நிலவுகிறது; கோதுமை உட்கொண்டால் அதிக உடல் வலிமையைப் பெறலாம்"

என்று, அமெரிக்க கோதுமைக் கழகத்தின் இயக்குநரான திரு. ஆர். ஏ ஹண்ட் தெரிவித்தார்.

விமான நிலையத்தில் தம்மைச் சந்தித்த செய்தியாளர்களிடம் அவர் பேசுகையில் மேலும் கூறியதாவது:—

"இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஜப்பானியர்கள், அரிசியுடன் கோதுமையை அதிக அளவில் உண்ணத் தொடங்கினர்; ஜப்பானின் மகத்தான தொழில் முன்னேற்றத்துக்கு இதுவும் ஒரு காரணமாகும்.

"கோதுமை உண்ணும் மக்கள் மிகவும் சுறுசுறுப்பாக இருப்பார்கள்.

"கடந்த 20 ஆண்டுகளில் ஜப்பானியர்களின் சராசரி உயரம் 2 அங்குலம் அதிகரித்திருக்கிறது என்பது, ஒரு கணக்கெடுப்பின் மூலம் தெரியவருகிறது."

இந்திய மருத்துவமனைக்கு பல இலட்சம் ரூபாய்!

ஸ்டாலின் மகள் நன்கொடை

ஸ்டாலின் மகளான திருமதி ஸ்வெட்லானா, தாம் எழுதிய இரண்டாவது நூலின் இந்திய மொழிப் பதிப்புகள் விற்பனை மூலம் கிடைக்கும் பணம் முழுவதையும், பிரதாப்கர் மாவட்டத்தில் கலகங்கர் என்னுமிடத்தில் கட்டப்படவிருக்கும் மருத்துவமனைக்கு நன்கொடையாக வழங்கி முடிவு செய்திருக்கிறாராம்.

தமது கணவரான குன்வார் பிரஜேஷ் சிங்கின் நினைவாக இந்த நன்கொடையை அவர் வழங்குகிறாராம்.

இவர் ஏற்கனவே, ரூ. 18 இலட்சம் இந்த மருத்துவமனைக்காகக் கொடுத்திருக்கிறார்.

இந்த மருத்துவமனை 1969 மே திங்களில் திறக்கப்படவிருக்கிறது.

தீண்டாமை ஒழிப்புக் குழு

ஆயுட்காலம் நீட்டிப்பு

புதுடில்லி, டிச. 11—

தீண்டாமை ஒழிப்பு, தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் வாழ்க்கை, கல்வி ஆகியவற்றின் மேம்பாடு சம்பந்தமான குழுவின் அலுவல் காலத்தை இந்திய அரசு அடுத்த ஆண்டு சனவரி 25-ம் நாள்வரை நீட்டித்திருக்கிறது.

ஏழு உறுப்பினர்கள் கொண்ட இக்குழு 1965-ம் ஆண்டு ஏப்ரல் திங்களில் நியமிக்கப்பட்டது; திரு. எஸ் இளையபெருமாள் இக்குழுவின் தலைவர்; குழு தனது இடைக்கால அறிக்கையை 1965 டிசம்பரில் அளித்தது.

சிறிய நகராட்சிகளின் சுகாதார அதிகாரிகள்

தமிழக அரசின் புதிய ஏற்பாடு

சென்னை, டிச. 11—

தமிழகத்தில் தகுதி பெற்ற மருத்துவ அதிகாரிகள் போதிய அளவு இல்லாததைக் கருதி, இரண்டாவது பிரிவு—மூன்றாவது பிரிவு நகராட்சிகளில் சீனியர் சுகாதார இன்ஸ்பெக்டர்களை மருத்துவ அதிகாரிகளாக அரசு நியமிக்கிறது.

2-வது, 3-வது பிரிவு நகராட்சிகளின் சுகாதாரப் பணிப் பொறுப்புகள் ஏற்கனவே மாவட்ட சுகாதார அதிகாரிகளிடம் இருந்து வந்தன; மாவட்ட சுகாதார அதிகாரிகளுக்கு இது 'அனாவசியமான பளு' என அரசு கருதி, அந்நகராட்சிகளுக்கு அந்தப் பணிக்காகத் தனி அதிகாரிகளை நியமிப்பது என்று தீர்மானித்துள்ளது.

சிறிய நகராட்சிகளில் தகுதி பெற்ற மருத்துவ அதிகாரிகளை சுகாதார அதிகாரிகளாக நியமிக்க அரசு விரும்பவில்லை. ஆகவே அந்நகராட்சிகளுக்கு சீனியர் சுகாதார இன்ஸ்பெக்டர்களையே சுகாதார அதிகாரிகளாக அரசு நியமிக்க ஆரம்பித்துள்ளது. மாநிலத்தில் ஏற்கனவே இம்மாதிரி 18 பதவிகள் உள்ளன. இன்னும் பல பதவிகள் ஏற்படுத்தப்படுமென்றும் தெரிகிறது.

முதல் பிரிவு, இரண்டாவது பிரிவு நகராட்சிகளில் தகுதி பெற்ற மருத்துவ அதிகாரிகளே சுகாதார அதிகாரிகளாக இருப்பார்கள்.

திருச்சியில் சுகாதார அமைச்சர் சாதிக் பாட்சா நிருபர்களுடன் பேசுகையில் இத்தகவலைத் தெரிவித்தார்.

பெண்கள் திருமண வயது 15 லிருந்து 18 ஆகவும் ஆண்கள் திருமண வயதை 18 லிருந்து 21 ஆகவும் உயர்த்த வேண்டுமென்ற மத்திய அரசின் யோசனையைத் தமிழக அரசு ஒப்புக்கொண்டுள்ளது என்றும் அவர் சொன்னார்.

பார்வை இழந்த அனாதைப் பெண்களுக்கு மறுவாழ்வு

திருவான்மியூரில் தொழிற் பயிற்சி நிலையம்

அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் திறந்துவைத்தார்

சென்னை, டிச. 11—

கண் பார்வையிழந்த அனாதைப் பெண்களின் மறு வாழ்வுக்கான தொழிற் பயிற்சி நிலையமொன்றைக் கல்வியமைச்சா இரா. நெடுஞ்செழியன் அவர்கள், திருவான்மியூரில் திறந்துவைத்தார்.

இங்கு கைவினைத் தொழில்களை—குறிப்பாக பின்னல் வேலை, கூடை முடைதல் போன்றவற்றைச் செய்வதற்கு வசதிகள் உள்ளன. அதுமட்டுமன்றி, கண் பார்வையிழந்த பெண்கள் இங்கேயே தங்கிப் பயிற்சி பெறவும் வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

திருவான்மியூரில் மருந்தேசுவரர் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான நிலம் இந்திய மகளிர் கழகத்துக்கு நீண்ட நாள் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது; அந்த இடத்தில் புதிதாகக் கட்டப்பட்ட எளிமையான இக்கட்டிடம், பார்வை இழந்த அனாதைப் பெண்களுக்குக் கைத்தொழில் பயிற்சி அளிக்க ஏற்படுத்தப்பட்டுள்ளது. முதலில் 6 குருட்டுப் பெண்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

உடல் ஊனமுற்றோர் நலத்தைப் பேணும் சங்கத்தார், திருவான்மியூரில் ஏற்கனவே கைகால்கள் முடமான ஆண்களுக்கென்று தொழிற் பயிற்சி நிலையம் ஒன்றை நடத்தி வருகிறார்கள். புதிதாக இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ள இது மேற்படி சங்கத்தின் இரண்டாவது பணியாகும்.

இரண்டாவது உலகப் போரில் பணியாற்றி—போரில் தமது பார்வையை இழந்தவரும் கொடையுள்ளம் படைத்தவரும், இப்புதிய பிரிவுக்குத் தலைவருமான டாக்டர் ஆர். கிருஷ்ணசாமி இப்புதிய பிரிவுக்கு வேண்டிய பொருளுதவியும், உழைப்பும் நல்கி வருகிறார்.

அமைச்சரை வரவேற்று அவர் பேசுகையில், கண்களை இழந்தவர்களைப் பார்த்து இரக்கப்பட்டு உதவி கேட்கவில்லை என்றும், சமூகத்திற்குத் தகுந்த முறையில உழைப்பைக் கொடுத்து அதற்கேற்ற ஊதியத்தைப் பெறத்தான் குருடர்கள் விரும்புகிறார்கள் என்றும பார்வை இழந்தோர்களின் சார்பில் குறிப்பிட்டார்.

அமைச்சர் திரு. நெடுஞ்செழியன் பயிற்சி நிலையத்தைத் துவக்கி வைத்து, காலத்தின் தேவைக்கேற்ற தொழிற் பயிற்சிகளையும் பார்வை இழந்தோர்க்கு அளித்து அதன் மூலம் சிறந்த முறையில பார்வையிழந்தோர் ஊதியம் பெற்று மறுவாழ்வு பெறத்தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று யோசனை கூறினார்.

டயர், டியூப் விலைகள் குறையும்!

வெளிநாட்டிலிருந்து ரப்பர் இறக்குமதி

புதுடில்லி, டிச. 11—

இப்போதைய ரப்பர் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்காக 12,000 டன் ரப்பரை உடனே இறக்குமதி செய்வதென்று மத்திய அரசு முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

டயர், டியூப் போன்றவற்றின் விலைகளைக் குறைக்க இந்த இறக்குமதி உதவி புரியும் என்று கூறப்படுகிறது.

அண்ணா சிகிச்சை நிதி

இராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் வேண்டுகோள்

இராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் எஸ். எஸ். தென்னரசு அறிவிப்பதாவது:—

"தலைமைக் கழகத்தின் வேண்டுகோளுக்கிணங்க, கழகச் சட்டமன்ற—சட்டமன்ற மேலவை உறுப்பினர்களும், வட்டச் செயலாளர்கள் நகரச் செயலாளர்கள் ஆகியோரும் அறிஞர் அண்ணா சிகிச்சை நிதிக்கு தர ஏராளமாக நிதியளித்து உதவுமாறு, கேட்டுக்கொள்கிறேன்.

உங்கள் குடும்பத்தைத் திட்டமிடுங்கள்

1. குடும்பத்தின் அளவைக் குறைக்க 'வாசக்டமி', பாதுகாப்பான எளிய வழி முறையாகும்.
2. இது நிரந்தரமானதொரு குடும்பக் கட்டுப்பாட்டு முறை இரண்டு குழந்தைகளையுடைய தம்பதிகளில், கணவன், 'வாசக்டமி' (அறுவை முறை) செய்து கொள்ளலாம்.
3. இந்த அறுவை முறையின் தன்மையைத் தாங்கள் உணர்ந்திருப்பதாகவும், தாங்கள் இதற்குச் சம்மதிப்பதாகவும் கணவனும் மனைவியும் தம்மிச்சையாக எழுதிக் கொடுக்க வேண்டும்.
4. இந்த முறை, ஒரு சில நிமிடங்களில் செய்யக்கூடிய மிகச் சாதாரணமான ஒன்று.
5. 'வாசக்டமி' செய்துகொண்டவர், மருத்துவமனையில் தங்கியிருக்க வேண்டியது இல்லை; உடனடியாக வீட்டுக்குப் போய் ஓய்வு எடுக்கலாம்.
6. அறுவைக்குப் பின்னர் ஐந்தாவது நாளில் தையல் பிரிக்கப்படும்; அதன் பின்னர் வேலைக்குப் போகலாம்.
7. அறுவை செய்துகொண்ட தந்தை இரு மாதங்களுக்கு சைக்கிள் ஓட்டக் கூடாது.
8. அறுவை நடந்த எட்டு வாரங்களுக்குப் பின்னர்தான் விந்துவின் உயிர் அணுக்கள் இரா. எனவே, இந்தக் காலத்திற்குள், ஆண் -- பெண் உறவு வைத்துக்கொள்வதானால் ரப்பர் கருவி உபயோகித்தல் வேண்டும்; இல்லையேல், கருத்தரிக்கும் வாய்ப்பு எண்டு.
9. 'வாசக்டமி' அறுவை முறை, உடல்நலத்திற்கு எந்தவிதமான கெடுதலும் விளைவிக்காது.
10. இந்த அறுவை முறை, ஆண்மையைக் குறைப்பது இல்லை; ஆண்-பெண் உறவுக்கு ஊறு விளைவிப்பதும் இல்லை; தாம்பத்திய வாழ்வு சாதாரணமாகத் தொடரத் தடை ஏதும் இல்லை.
11. வேலைசெய்யும் ஆற்றலுக்குக் குந்தகம் ஏற்படாது; ஜீரண சக்திக்குப் பாதகம் ஏற்படாது.
12. தமிழ்நாட்டில் மட்டும் 1959-லிருந்து ஏழு இலட்சம் 'வாசக்டமி' அறுவை முறை செய்யப்பட்டிருக்கின்றன எந்தவிதமான விரும்பத்தகாத விளைவுகள் பற்றியும் புகார் இல்லை.
13. அரசினர் மருத்துவமனைகளிலும், ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும், அரசு அங்கீகாரம் பெற்ற அறுவைச் சிகிச்சை நிலையங்களிலும் 'வாசக்டமி' இலவசமாகச் செய்யப்படும்.
14. பயிற்சி பெற்ற டாக்டர்கள் மட்டுமே இந்த ஆபரேஷன் செய்கிறார்கள்.
15. 'வாசக்டமி' ஆபரேஷன் செய்துகொண்டவர்கள் பின்னர் குழந்தை பெற விரும்பினால், அதற்கு வழிசெய்ய முடியும்.
16. அரசு அங்கீகாரம் பெற்ற இடங்களில், இந்த ஆபரேஷன் செய்துகொள்ளும் ஒவ்வொரு தந்தைக்கும் ரூ. 30 ரொக்கமாக வழங்கப்படுகிறது இந்தத் தொகை, ஆபரேஷனுக்குப் பின்னர் ஐந்து நாள் ஓய்வின்போது வருமானத்தை ஈடு கட்டுவதற்காகத் தரப்படுகிறது. இந்தத் தொகையைப் பெற ஒரு தந்தை 55 வயதுக்குக் குறைந்தவராகவும், இரண்டு குழந்தைகளுக்குத் தந்தையாகவும் இருத்தல் வேண்டும்.

இரண்டு குழந்தைகளுக்குமேல் உள்ளவர்களுக்குக் குடும்பக் கட்டுப்பாட்டுக்குச் சிறந்த வழி, 'வாசக்டமி' அறுவை முறைதான்.

உங்களுக்கு அருகாமையிலுள்ள அரசினர் மருத்துவமனை அல்லது ஆரம்பச் சுகாதார நிலைய டாக்டரை அணுகி தேவையான ஆய்வுரை உதவியும் பெறுங்கள்.

வேறு தேவையான விவரங்களைக் கீழ்க்கண்ட முகவரியில் பெறலாம் :—

நலப் பணிகள் — குடும்ப நலத் திட்ட இயக்குநர் அலுவலகம் ; மருத்துவக் கல்வித் துறை இயக்குநர் அலுவலகம் ; சேப்பாக்கம், சென்னை-5.

காண்டோம்

அடிக்கடி கருத்தரிப்பது உடல் நலத்தைக் கெடுக்கும் கருத்தரிப்பதைத் தள்ளிப் போடுவது எப்படி ?

'காண்டோம்' (ரப்பர் கருவி) உபயோகிப்பதுமூலம் கருத்தரிப்பதைத் தடுக்கலாம்.

நீண்ட காலம் 'காண்டோம்' உபயோகப்படுத்துவதுகூட எந்தவிதமான கெடுதலும் விளைப்பது இல்லை. தாம்பத்திய இன்ப வாழ்வைக் குறைப்பதும் இல்லை.

'காண்டோம்' கீழ்க்கண்ட இடங்களில் இலவசமாகக்கிடைக்கும் :—

- எல்லா அரசினர் மருத்துவமனைகள்.
- ஆரம்பச் சுகாதார நிலையங்கள்.
- மகப்பேறு மற்றும் குழந்தை மருத்துவமனைகள்.

விவரங்களுக்கு உங்கள் டாக்டரிடம் ஆலோசனை செய்யுங்கள்.

லைசென்சு இல்லாத மதுக்கடைகள்!

புதுவையில் ரெவினியூ இலாகாவின் அலட்சியம் காரணமாகத் தேர்தல் நேரத்தில் காங்கிரசுக்காரர்கள், ஊருக்கு ஊர் லைசென்சு இல்லாத கள்ளுக் கடைகளும், சாராயக் கடைகளும் திறந்து அரசுச் சட்டத்தையும் மீறி--பாமர மக்களுக்குக் கள்ளையும், சாராயத்தையும் ஊற்றி 'மகாத்மா காந்திக்கு ஜே--காமராசர் வாழ்க' என்று கூறிக்கொண்டு வருகிறார்கள்.

அரசு நிர்வாகிகள் சரியான நிலையோடு பணியாற்றினால், ஊருக்கு ஊர் சாராயக் கடைகளும், கள்ளுக் கடைகளும் லைசென்சு இல்லாமல் இருக்க முடியாது. இலட்சக்கணக்கான ரூபாய் போட்டு எடுத்த உரிமை பெற்ற கலால் வியாபாரிகள், இதனால் பாதிக்கப்படுகிறார்கள் !

அண்ணா வேண்டுகோள்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வேண்டியிருக்கிறது -- 'இல்லை' என்று !

இன்றும், நிறம்,--இனம்--மொழி. 'எனும் பல்வேறு காரணங்கள் காரணமாகப் பல நாடுகளிலே மனித உரிமைகள் அழிக்கப்படுகின்றன.

மக்கள் உரிமைச் சாசனத்தையோ, அதனை ஏற்றுக் கொண்டுள்ள நாடுகளின் எதிர்ப்பையோ, ஐக்கிய நாடுகள் மன்றத்தின் மாண்பையோ, அக்கிரமம் புரிந்திடும் நாடுகள் மதிப்பதாகத் தெரியவில்லை.

ஆனால், மக்களின் உரிமைகள் பறிக்கப்படும்போது, முன்பு, உலகு வாய் முடிக்கிடந்திட வேண்டி இருந்தது; இன்று கண்டனம் எழும்புகிறது; ஐக்கிய நாடுகள் மன்றக் கூட்டங்களில்--மனித குலத்தின் சார்பாக வாதாடுவதற்கு நான் இருக்கிறேன்' என்று அறிவிக்கிறது.

ஆண்டுதோறும் இந்நாளைக் கொண்டாடுவதன்மூலம் ஐக்கிய நாடுகள் மன்றத்தின் வலிவுக்கு நாம் மேலும் உரம் ஊட்டுகிறோம்; அக்கிரமம் செய்திடும் நாட்டினருக்கு, 'உலகு விழித்துக்கொண்டுதான் இருக்கிறது 'என்பதை' எடுத்துக் காட்டுகிறோம் !

மக்கள் உரிமை சாசனத்திற்குப் பக்கபலமாக, மனிதகுலம் திரண்டு நின்றிடவேண்டும். இதற்கான முயற்சியும் உறுதியும் நாம் அனைவரும் பெற்றிட இந்நாள் பயன்படுகிறது.

வாழ்க மக்கள் உரிமை ! வெல்க மக்கள் உரிமை !"

'டூபக்டமி'

[பெண்களுக்கான கருத்தடை அறுவை முறை]

'டுபக்டமி' மூலம் குடும்பத்தைக் கட்டுப்படுத்துங்கள்

பெண்களுக்குச் சிறந்த குடும்பக் கட்டுப்பாட்டு முறை

'டூபக்டுமி' --- சாதாரணமாக, பிரசவத்திற்குப் பின்னர் மூன்றுவது நாள் செய்யப்படுகிறது.

இதைச் செய்து கொள்ளும் பெண் 24 வயது உடையவராகவும், இரண்டு குழந்தைகளுக்குத் தாயாகவும் இருக்க வேண்டும்.

கணவன்---மனைவி இருவரும் உறுதிமொழிப் பத்திரத்தில் கையெழுத்திட்ட பின்னரே அறுவை செய்யப்படும்.

எல்லா அரசினர் மருத்துவமனைகளிலும் இது இலவசமாகச் செய்யப்படும்.

அறுவை செய்து கொள்ளும் தாய்மார்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 30 அலவன்சு தரப்படும்.

இந்த முறை உடல் நலத்தைப் பாதிக்காது; அன்றாட வேலைக்குத் தடையாக இராது.

இது, ஆண்--பெண் உறவுக்குக் குந்தகமாக இராது.

இந்த ஆபரேஷன் செய்துகொள்ள அருகாமையில் உள்ள அரசினர் பெண்கள் மருத்துவமனையில் பதிவு செய்துகொள்ளுங்கள்.

சிறிய குடும்பமே மகிழ்ச்சிகரமான குடும்பம்.

உங்கள் வாழ்வு முழுமையும் மகிழ்வு பெறக் குடும்பத்தை அளவோடு வைத்துக்கொள்ளுங்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13. அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

அறிஞர் அண்ணா சிகிச்சை நிதி

அறிஞர் அண்ணா சிகிச்சை நிதிக்காகத் தொகை அனுப்புமாறு கழகப் பொருளாளர் மு. கருணாநிதி அவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கேற்ப நிதியளித்த தோழர்கள் :—

	ரூ. காசு
நேற்றைய இதழ்த் தொடர்ச்சி	24,804.44
நாகர்கோவில் கோட்டாறு ஏ. குமரவேல்	100.00
குடியேற்றம் நடுப்பேட்டை திருவள்ளுவர் அச்சகம்	100.00
குளித்தலை (கிருஷ்ணராயபுரம் தொகுதி) பெ. சௌந்தரபாண்டியன் எம்.எல்.ஏ.	100.00
கிருஷ்ணராயபுரம் ப. இராமன்	101.00
மதுரை-1 மீனாட்சி ஆலை சொ. இராமநாதன்	30.00
பெரிய காஞ்சிபுரம் கூட்டுறவு டவுன் பாங்கி இயக்குநர் எஸ். ஜி. பெருமாள்	25.00
நெல்லிக்குப்பம் பா. திருஞானம்	25 00
மதுரை-1 கீழமாசி வீதி கே. பி. எஸ். குருசாமி அன் கோ	21.00
சோமண்டார்குடி எம். எஸ். வரதராசன்	25.00
ஆரணி (வ.ஆ.) மின்வாரியம் வருவாய் பிரிவு நண்பர்கள்	30.00
நாகர்கோவில் -- மீனாட்சிபுரம் கே. குமாரசாமி	25.00
சென்னை-23 'பாரிஸ் காப்பி' உற்பத்திசாலை— பி. கே. குப்புசாமி	25 00
சென்னை--தியாகராய நகர் அன்பழகன் முரசக் கடை செயராமன்	51 00
பெங்களூர் எஸ். ஜே. உசேன்	25 00
அமைச்சர் சாதிக் பாட்சா அவர்கள் மூலம் :—	
இராமநாதபுரம் டி. இரத்தினம்	31.00
,, 16-வது வார்டு காஞ்சி	6 00
,, பி. கணேசன்	2 00
இராமநாதபுரம் 8—12—68 பொதுக்கூட்டத்தில் அமைச்சர் சாதிக் பாட்சா அவர்களிடம்	13 00
சென்னை-1 கலைமணி அச்சக உரிமையாளர் க. திருவேங்கடம்	10.00
சங்கரி வட்டச் செயலாளர் பா. பண்டரிநாதன்	25 00
ஆக மொத்தம்	25,574.44

குடும்ப நலத் திட்டம்

'லூப்' முறையின் நற்பயன்

1. லிப்பியின் லூப், கர்ப்பத் தடை செய்யவும், குழந்தைகளுக்கு இடையே போதிய இடைவெளி ஏற்படுத்தவும் பயன்படுகிறது.
2. மணமான பெண்களுக்கு, குடும்பக் கட்டுப்பாட்டுக்கு லூப் பொருத்தலாம்.
3. லூப் பொருத்துவதற்கு முன்னர், எத்தனைக் குழந்தைகள் பிறந்திருந்தாலும் இதனைப் பொருத்துவதில் தடை எதுவும் இல்லை.
4. லூப் சரியானபடி பொருத்தப்பட்டால், கணவனுக்கும் சரி—மனைவிக்கும் சரி—அது இருப்பதே தெரியாது.
5. டாக்டரால் ஒருமுறை லூப் பொருத்தப்பட்டால் போதும்; இதர சில முறைகளைப்போல மீண்டும் மீண்டும் கருத்தடைச் சாதனங்களைத் தேடிப் பெற வேண்டிய அவசியம் இதில் இல்லை.
6. தேவையானபோது இதை நீக்கிவிடலாம்; பின்னர் மீண்டும் கருத் தரிக்கலாம். இதனால், இந்த முறையைக் கையாள கணவன் -- மனைவியின் எழுத்து மூலமான சம்மதம் தேவையில்லை.
7. மீண்டும் குழந்தை பெற விரும்பினால், டாக்டரிடம் போய் லூப்பை எடுத்துக்கொள்ளலாம். பின்னர் ஒரு மாதத்திற்குள் மீண்டும் கருத் தரிக்கலாம். அதனால் கர்ப்பம் தரிப்பதற்கோ, பிறக்கும் குழந்தைக்கோ எந்தவிதக் கெடுதலும் இல்லை.
8. லூப் செலவில்லாத ஒன்று இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு தகுதியான பெண்ணுக்கும் இது இலவசமாகக் கிடைக்கும்.
9. நோய்—நொடி இருப்பதைக் கண்டுபிடிக்கவும், இருந்தால் அவற்றுக்குச் சிகிச்சை அளிக்கவுமான வாய்ப்பு, லூப் பொருத்த வரும் ஒவ்வொரு பெண்ணுக்கும் கிடைக்கிறது. பெண் உறுப்பில் உள்ள கோளாறுகள், புற்று நோய், காச நோய் போன்றவற்றைக் கண்டுபிடிக்கவும்—சிகிச்சையளிக்கவும் வாய்ப்பு ஏற்படுகிறது.
10. இன்று நமக்குத் தெரிந்துள்ள முறைகளில், 'லூப் சிறந்தது' என்று இதுவரை வெளியான ஆராய்ச்சி முடிவுகள் கூறுகின்றன.

வேறு விவரம் தேவையானால் கீழ்க்கண்ட இடங்களில் பெறலாம் :—

1. குடும்ப நலத் திட்டத் துணை இயக்குநர், நலப் பணிகள்—குடும்ப நலத் திட்ட இயக்குநர் அலுவலகம், சென்னை-6.
2. பெண்கள் --- குழந்தைகள் மருத்துவமனை, எழும்பூர், சென்னை-8.
3. அரசினர் கஸ்தூர்பா காந்தி மருத்துவமனை, திருவல்லிக்கேணி, சென்னை-5.
4. கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சென்னை-10.